## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க,
# சட்ட விலக்குரிமை (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988 திசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை: சதம் 30* *தபாற் செலவு: சதம் 75*

**1988 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, சட்ட விலக்குரிமை (திருத்தச்) சட்டம்**

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 64/88

**1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சட்டவிலக்குரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, சட்ட விலக்குரிமை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்ட விலக்குரிமைச் சட்டத்தின் விரிவுப் பெயர் " 1977 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் தேதிவரையிலான" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இயைபான தேதி வரையிலான" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — 1932 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவுள்ள "1977 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆம் தேதிவரையிலான" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இயைபான தேதிவரையிலான" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் சேர்க்கப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு எனப் பயனுறுதலும் வேண்டும்:— — முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய 3 ஆம் பிரிவைச் சேர்த்தல்.

"பொருள்கோடல். — 3. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக "இயைபான தேதி" என்பது இப்பிரிவின் ஏற்பாடுகள் வலுவுக்கு வரும் தேதிக்கு நேர் முந்திய நாள் என்று பொருளாகும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.